திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பதற்கு முன்பே நரிக்குறவர்களுக்கு வீடுகளையும் மனைகளையும் வழங்குவதற்காக நல்ல திட்டங்களை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய் தெய்வம் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இந்த மாமன்றத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது, பாரதி

"சேறுபட்ட நாற்றமும்-தூறுஞ் சேர்
சிறியவீடு கட்டுவாய் போ போ போ."

என்று சொன்னார். அந்தப் பொருள் உணராத நரிக்குறவர்களுக்காக பாரதியினுடைய கனவை நனவாக்கிய இதய தெய்வம் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 59, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண் 60, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

60—

கிராம மக்களுக்கு கதர்த் தொழில் மூலம் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

***36582—திரு. சிங்கை கோவிந்தராசு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம மக்களுக்கு கதர்த் தொழில் மூலம் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கிராம மக்களுக்கு கதர்த் தொழில் மூலம் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வளர்ச்சியிலே, அதுவும் தொழில்

1994 நவம்பர் 8]

வளர்ச்சியிலே, மிகமிக ஆர்வமும் அக்கறையும் கொண்டு சிறந்த ஆட்சி நடத்தி வருகின்ற, தொழிற் புரட்சி ஏற்படுத்தி வருகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தொழில் மறுமலர்ச்சி ஏற்படுத்துகின்ற வகையிலே, அடுத்த நிதியாண்டிலாவது வீட்டிற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பைத் தருகின்ற திட்டத்தினை கிராம மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே கதர்த் தொழில் மூலம் ஏற்படுத்துகின்ற நிலையை இந்த அரசு உருவாக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலே கதர் கிராமத் தொழில் வாரியத்தில் வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும்கூட, ஒரு கிராமத்திற்கு ஒரு கிராம நூற்பு மையம் என்ற விதத்தில் 670 கிராம நூற்பு மையங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் கிராமங்களில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேருக்கு, முழுவதும் பெண்களுக்கே வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அளவிலே 670 கிராம நூற்பு மையங்கள் மிக நல்ல முறையிலே இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டு அதன் மூலம் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். தற்போது வாரியத்தில் வசதியும் இல்லை, வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதியும் வாய்ப்பும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக எடுத்துரைத்தார்கள். ஆனால், 670 நூற்பு மையங்கள் இருக்கக்கூடிய கதர் கிராமத் தொழிலில், அவைகளையாவது இன்னும் அதிகப்படுத்தினால் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்கின்ற நிலை இல்லாவிட்டாலும், இன்னும் கிராம மக்களுக்கு அதிகமாக அந்த நூற்பு மையங்களில், அதுவும் குறிப்பாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தாய்க் குலத்தின் மீது மிகவும் நல்ல அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற நேரத்தில், அவர்களுக்கு இன்னும் அதிகமாக அந்த வேலை வாய்ப்புகள் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் அந்த 25 நூற்பு மையங்களை இன்னும் அதிகப்படுத்துவதற்காக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 670 கிராமிய நூற்பு மையங்களுக்கு மேலாக, இந்த ஆண்டு மேலும் கூடுதலாக 25 கிராமிய நூற்பு மையங்கள் அமைப்பதற்கு வாரியத்தின் மூலம் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முதல் நடவடிக்கையாக, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நமது தமிழகத்திற்கு அடையாளம் காட்டிய பர்கூர் தொகுதியில் 6 கிராமிய நூற்பு மையங்களை அமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து அனைத்து தொகுதிகளிலும், இதுபோன்ற கிராமிய நூற்பு மையங்களை அமைப்பதற்கு வாரியம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

59—

ராதாபுரம் தொகுதியிலுள்ள உவரியை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

***24526—திருமதி ரமணி நல்லதம்பி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி, உவரியை சுற்றுலா மையமாக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உவரியை மாவட்ட உலாத்தலமாக அரசு அறிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு**- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]